**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**

**அசல் வழக்கு எண். 290/2020**

**வா.சா.1 – சுகிதரன்**

**10–10–2025 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

3. எனது தகப்பனாருக்கு இரு மகன்கள் ஒரு மகள் வாரிசுகள். எனது அண்ணன் பெயர் செல்வன் சிபிசுதன் எனது தங்கை பெயர் செல்வன் சிமி சுஹானா. எனது பிறந்த தேதி 18.09.1994. எனது தகப்பனாருடன் உடன் பிறந்தவர்கள் ருக்குமணி, கமலா, செல்வி என்று மூன்று சகோதரிகள். எனது தாத்தா வெங்கடாச்சலம் கார்மெண்ஸ் தொழில் செய்துவந்தார். எனது தாத்தாவுடன் பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்று தெரியாது. எனது அப்பா எனது தாத்தாவுடன் சேர்ந்து கார்மெண்ஸ் தொழில் செய்தார் என்றால் எனக்கு அப்போது சிறு வயது என்பதால் தெரியாது. கார்மெண்ஸ் நிருவனத்தின் பெயர் என்ன என்றால் சான்கோ மற்றும் எம்ரோலைன்ஸ் என்ற பெயரில் நிருவனங்கள் இருந்தன.

4. நான் 2016ம் ஆண்டு எனது பொறியியல் படிப்பை முடித்தேன். எனது அண்ணன் அவரது கல்லூரிப்படிப்பை 2012லும், எனது தங்கை 2018லும் முடித்தார். எனது அண்ணன் வெங்கடாச்சலத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து சம்பந்தமாக வேறு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் குன்னூரில் பள்ளிப்படிப்பையும், பெங்களூரில் கல்லூரிபடிப்பையும் படித்தேன். 2012ல் நான் மேஜரானேன். எனது தாத்தா வெங்கடாச்சலம் எழுதி வைத்த உயில் ஆவணத்தின் அசல் என்வசம் உள்ளது. அதனை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அசல் ஆவணத்தை ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் காண்பித்ததாகதான் ஞாபகம், அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

5. உயில் சாசனத்தை எனது தாத்தாவின் நண்பர் தியாகராஜன் எனது அண்ணனிடம் 2017 ம் ஆண்டு கொடுத்தார். எந்த மாதம் எந்த தேதி என்று ஞாபகம் இல்லை. எனக்கும் எனது தகப்பனாரும் விரோதம் இல்லை என்றால் சரியல்ல. ஒரே வீட்டில் உள்ளோமா என்றால் இல்லை, தனித்தனியாக உள்ளோம். 2017 அல்லது 2018 ம் ஆண்டு முதல் எனது தகப்பனாரும் நானும் பிரிந்துள்ளோம். எனது தகப்பனாருடன் நாங்கள் யாரும் வசிக்கவில்லை. எனது தாயார் எங்களுடன் தான் வசிக்கிறார். உயில் விபரம் எனது தகப்பனாருக்கு தெரியும். எனது தகப்பனாருக்கு உயில் விபரம் எப்போது தெரியும் என்று எனக்கு ஞாபகம் இல்லை.

6. எனது தாத்தாவின் நண்பர் தியாகராஜன் உயிருடன் உள்ளரா என்றால் தெரியாது. எனது தாத்தா எத்தனை உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் எனக்கும் எனது சகோதரருக்கும் சேர்த்து ஒரே உயில் எழுதியுள்ளார். உயிலின் அடிப்படையில் இவ்வழக்கு இல்லாமல் மூன்று வழக்கு உள்ளதாக ஞாபகம். அவ்வழக்குகளை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் நானும் தாக்கல் செய்துள்ளேன். உயில் சாசனத்தை படித்துபார்த்துள்ளேன். உயில் சாசனத்தில் தியாகராஜனிடம் உயில் கொடுத்துவைத்ததாக விபரம் குறிப்பிடவில்லை என்றால் ஞாபகம் இல்லை. எனது தாத்தவின் அசல் கிரையப்பத்திரம் யாரிடம் உள்ளது என்றால் ஞாபகம் இல்லை. விடுதலைப்பத்திரம் பற்றிய விபரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் 2017 ம் ஆண்டு தெரியும்.

7. வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்துக்கல் எங்கு உள்ளது, எந்த காலையில் உள்ள என்ற விபரங்கள் எனக்கு தெரியும். எந்த வகையான சொத்து இந்த வழக்கு சொத்து என்றால் விவசாய பூமி மற்றும் காலி இடம் சேர்ந்தது. உயில் சொத்துக்களுக்கு ஒரே வழக்காக தாக்கல் செய்யப்படாததற்கான காரணம்

என்ன என்றால் வங்கிகள் பல உள்ளதால் பிரித்துபோட்டுள்ளோம். எனது அப்பா சொத்துக்களை எப்போது அடமானம் வைத்தார் என்று ஞாபகம் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பிரமாணவாக்குமூலத்தில் உள்ள விபரம் யார் சொல்லி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் நான் சொல்லி தான் போடப்பட்டது.

(மேலும் குறுக்கு விசாரணைக்காக வாய்தா ஒத்திவைக்கப்படுகிறது. )

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2025.10.10 13:15:50 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.